மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பயிற்சி பெறுமலேயே மலையேறும் பழக்கம் உள்ளவர்களாக சிலர் இருக்கிறார்கள். யார் யார் பயிற்சி பெறவேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்களுக்குத்தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. லிப்டை உபயோகப்படுத்தாமலேயே மாடிப்படி உபயோகப்படுத்தினாலேயே அது ஒருவிதமான பயிற்சியாக இருப்பது போன்று அமையும்.

THIRU K. VINAYAKAM ; This kind of mountaineering exercise would be useful for warfare, especially in mountain warfare. What are the possibilities of employment for these trainees ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த நோக்கத்தோடு இதை ஆரம்பிக்கவில்லை. மலையேறும் பயிற்சி பெற விரும்புகிறவர்களுக்கு குறிப்பிட்ட நாட்களில் அதாவது சீசன் நாட்களில் தான் ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது. இதில் 72 பேர்கள் விரும்பிப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : இப்போது பயிற்சிபெறுகிறவர்கள் என்ன நோக்கத்தோடு பயிற்சி பெறுகிறார்கள் ? பயிற்சி பெற்றவர்களுக்கு ஏதாவது சலுகைகள் வழங்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மற்றைய விளையாட்டுக்களில் ஈடுபடுகிறவர்கள் பெறுகின்ற அடிப்படையிலே தான் இந்தப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. இதில் சலுகைகள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

திரு. ஏ. அ. சுப்பராஜா : மலையேறும் பயிற்சிபற்றி மலையிலே வசிக்கக் கூடியவர்களுக்கு விவரமாகத் தெரியும். ஆகையால் அவர் களுடைய உதவியைப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மலையேறும் பயிற்சியை விரும்புகிறவர்கள் தான் இதில் வந்து சேருகிறார்கள். உத்திரகாசி நேரு நிலையத்தில் இதைக் கற்றுக் கொடுப்பதற்கு வல்லவர்கள் இருக்கிறார்கள். இதிலிருந்து மூவர் இந்தப் பயிற்சி வழங்க ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அப்படிப்பட்ட பயிற்சிப் பள்ளி இப்பொழுது ஏற்படாவிட்டாலும் ஆரம்பப் பயிற்சியாக இருக்கக்கூடிய வகையில் நீலகிரி மலைப்பாங்கான பிரதேசமாக இருப்பதால் இனிமேலாவது மலையேறும் பயிற்சிப் பள்ளியை அங்கு ஏற்படுத்த மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தியப் பாதுகாப்புத் துறை இந்தப் பயிற்சிப் பள்ளியை அவசியம் இல்லையென்றும் ஆண்டுக்கு ஆண்டு குறிப்பிட்ட நாட்களில் பயிற்சியை மேற்கொள்ளலாம் என்று குறிப்பிட்டதன் பேரில் உத்திரகாசி நேரு நிலையத்தோடு தொடர்புகொண்டு இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை 72 பேர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ஆண்டுக்கு ஆண்டு விரும்பி வருகிறவர்கள் பயிற்சி பெற்றாலே போதும்.

திரு. எம். எஸ். மணி : பயிற்சி பெறுகிறவர்களுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால் யார் நஷ்ட ஈடு கொடுப்பது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இது பற்றிய விவரக் குறிப்பு இல்லை.

*Footwear Production-*cum*-Training Units.*

THIRU A. M. RAJA ; Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the loss incurred in the Footwear Production-*cum*-Training Units in the State during 1965–67 ?

1968 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மிதியடிகளின் உற்பத்தி-பயிற்சி நிலையங்கள் நமது அரசிடம் ஒன்றுமில்லை. ஆனால் நமது அரசுக்குச் சொந்தமான தமிழக சிறு தொழில் கார்ப்பரேஷனிடம் நான்கு நிலையங்கள் உள்ளன. அவைகளில் மூன்று நிலையங்களில் 1965–66-ஆம் ஆண்டில் ரூ. 38,000 இழப்பு ஏற்பட்டது. ஒரு நிலையத்தில், ரூ. 27,000 லாபம் கிடைத்தது. 1966–67-ம் ஆண்டில் மேற்படி நிலையங்களில் இழப்பு ஒன்றுமில்லை. ஆனால் ரூ. 84,700 இலாபம் கிடைத்துள்ளது.

திரு. ஏ. எம். ராஜா : இந்தக் காலணிகளை உற்பத்தி செய்யும் நிலையங்கள் உற்பத்தி செய்யும் காலணிகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்களா ? ஆம் என்றால், எந்தெந்த நாடுகளுக்கு என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விவரக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போடவும்.

DR. H. V. HANDE : What is the total production during the years 1965-66 and 1966–67 and what is the number of employees employed ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரம்பூர் தொழிற்சாலையிலே 1965–66-ல் எட்டு லட்சம் உற்பத்தி செய்யப்பட்டது. 1966–67-ல் 13 லட்சத்து 19 ஆயிரம் உற்பத்தி செய்யப்பட்டது. எவ்வளவு பேர்கள் வேலை செய்தார்கள் என்ற விவரம் இல்லை. பல்லாவரத் தொழிற்சாலையில் 1965–66-ல் 3 லட்சத்து 58 ஆயிரம் உற்பத்தி செய்யப்பட்டது. 1966–67-ல் 3 லட்சத்து 86 ஆயிரம் உற்பத்தி செய்யப்பட்டது. திருவல்லிக்கேணியிலுள்ள தொழிற்சாலை பெரம்பூருக்கு மாற்றப்பட்டு அந்தப் பெயரில்தான் நடைபெற்று வருகிறது. இதில் 1965–66-ல் ஒரு லட்சத்து 9 ஆயிரமும் 1966–67-ல் ஒரு லட்சத்து 99 ஆயிரமும் உற்பத்தி செய்யப்பட்டது. மாதவரத்தில் உள்ள தொழிற்சாலையில் 1965–66-ல் 62 ஆயிரமும் 1966–67-ல் இரண்டு லட்சத்து 97 ஆயிரமும் உற்பத்தி செய்யப்பட்டது.

திரு. வி. எஸ். எஸ் மணி : தமிழகத்தில் உற்பத்தியாகக்கூடிய காலணிகள் ரஷ்யா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதியாளருக்கு அனுமதி லைசென்ஸ் ஏதாவது கொடுக்க மத்திய அரசுக்கு நம்முடைய அரசு சிபார்சு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

THIRU K. VINAYAKAM : What are the prices of these footwear of standard size in the factories mentioned above ? How do they compare with the prices prevailing in the private sector, namely, Bata and other companies ? Are these prices higher than those obtaining in the private sector or are they same ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றிய குறிப்பு இல்லை. அரசாங்கம் இதற்கு ஒரு முறை வைத்திருக்கிறது. ஆகும் செலவுக்குத் தகுந்தபடி எவ்வளவு விலை வைக்கலாம் என்று பார்த்து லாப நோக்கம் குறிப்பிட்ட அளவிலேதான் பார்த்து வைக்கப்படுகிறது. மார்க்கெட்டு விலையை நிர்ணயிக்க முடியாது. போட்டா போட்டி அடிப்படையில் விலைகளை ஏற்றவோ இறக்கவோ செய்வார்கள். இதுபற்றி பலர் சொல்லுவது கூடுமானவரை மலிவாகத்தான் இருக்கிறது என்ற நிலைமை இருந்து வருகிறது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாதவரத்தில் இருக்கின்ற இந்த உற்பத்திச் சாலையில் உற்பத்தியாகின்ற மிதியடிகள் அனைத்தும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா ? இங்கு உற்பத்தியாகக் கூடியவை நமக்குப் பயன்படுகிற அளவில் கொடுக்கப்படுவதில்லையென்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே; இங்கு உற்பத்தியாகக் கூடியவைகள் பெரும்பாலும் இங்கேயேதான் பயன் படுத்தப்படுகின்றன. வெளி நாடுகளுக்குப் போவதில்லை. கான்பூர், ஆக்ரா போன்ற இடங்களில் உற்பத்தியாகக் கூடியவைதான் பெரும்பாலும் வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலைமையில் இருக்கின்றன.

திரு. தொ. மு. நல்லசாமி : தலைவர் அவர்களே, காலணி உற்பத்தி இந்த நாட்டுக்கு மிகப் பெரிய அளவிலே தேவைப்படுகின்றது. இப்பொழுது உற்பத்தி நிலையம், பயிற்சி நிலையம் இரண்டையும் ஒன்றாக வைத்து நடத்திக் கொண்டு வருகிறோம். அப்படியில்லாமல், நஷ்டம் வந்தாலும், உற்பத்தி நிலையம், பயிற்சி நிலையம் என்று தனித்தனியாக நடத்த வேண்டும். ஆகவே, இதை மேலும் விரிவுபடுத்துகின்ற நோக்கமுள்ள வகையில் அரசாங்கம் திட்டம் ஏதாவது வகுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விண்ணமங்கலத்தில் இருக்கும் தொழிற்சாலையை விரிவு படுத்த முயற்சி நடைபெற்று வருகிறது. 1965–66-ல் இருந்ததை விட 1966–67-ல் அதிக லாபம் பெறுகிற நிலைமை இருக்கிறது. 1965–66-ல் 11 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் 1966–67-ல் 84,700 ரூபாய் லாபம் கிடைத்தது, ஆக மொத்தத்தில் 1965–67-ல் லாபம் 73,700 ரூபாய் கிடைத்திருக்கிறது. ஆகவே, மேலும் இதை விரிவுபடுத்தி, லாபத்தை அதிகமாகப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, காலணி உற்பத்தி நிலையங்களில் எந்தெந்தவிதமான காலணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன? அவை வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகின்றனவா ? அல்லது விற்பனை அரசாங்க நிறுவனங்களுக்கு மட்டுமா ? இந்த உற்பத்தி நிலையங்களில் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு வேண்டிய புரொட்டக்டிவ் ஃபுட் வேர் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது ஜெயில் டிபார்ட்மெண்டில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் பூட்ஸ்கள், செருப்புகள் இந்த நிலையங்களில் உற்பத்தியானவையே. மேலும், போலீஸ் துறை, டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் தொழிலாளர்களுக்கும் பூட்ஸ்கள், பெல்டு கள், கண்டக்டர் வைத்திருக்கும் தோல் பை போன்ற பொருள்கள் இந்த நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. தனியார் ஆர்டர் பேரிலும் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப் படுகின்றன. கனம் உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, பல்லாவரம் குரோம் லெதர் கம்பெனி, கார்டன் உட்ராஃப் கம்பெனி போன்ற தொழிற்சாலைகள் உள்ள இடமாக இருப்பதால், பல்லாவரத்திலுள்ள தொழிற்சாலையை மேலும் அதிகமாக விரிவுபடுத்தி, உற்பத்தியாகும் பொருள்களை விரிவான முறையில் விற்பனை செய்ய அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தத் தொழிற்சாலை 1958-ல் ஆரம்பிக்கப்பட்டு, இன்றைக்கு ரூ. 3 லட்சத்து 81 ஆயிரம் மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியாகி வருகின்றன. இதை மேலும் விரிவுபடுத்துவதற்கு வாய்ப்பு இருந்தால், அரசாங்கம் அதைப் பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, கிராமக் கைத்தொழில் துறையில் வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் ஆபீசர்ஸ் அவர்களின் அதிகாரத்தின் கீழ் கிராமப்புறங்களில் நடைபெற்றுவரும் சிறு தொழில்களான காலணி உற்பத்தி நிலையங்களை விரிவுபடுத்த அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

1968 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சிறு கைத்தொழில் நிலயம் சார்பாகத்தான் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். இம் மாதிரியாக 6 நிலேயங்கள் கூட்டுறவுத் துறையிலும், பல தனியார் துறைகளிலும் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளிஞல் நல்ல லாபம் இருந்து, தொழிலாளர்களுக்கும் வேலேவாய்ப்பு கிடைக்க வழிவகை இருந்தால், அரசாங்கம் தக்க நடவடிக்கைகளே எடுத்துக்கொள்ளும்.

திரு எம். எஸ். மணி : தலேவர் அவர்களே, நம் நாட்டில் தயாராகும் காலணிகளின் விலே குறைவாக இருக்கின்ற காரணத்திஞல், வெளி நாட்டிலிருந்து வருகின்றவர்கள் ஏராளமாக வாங்கிச் செல்லுகின்றனர் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இத்தொழிலே மேலும் விரிவுபடுத்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ? இத்தொழிலுக்கான பயிற்சி நிலேயங்களில் எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பாகுபாடின்றி பயிற்சி அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1—3—1966 முதல் 28—2—67 முடிய தாராமங்கலத்தில் உள்ள பயிற்சி நிலேயத்தில் 12 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 1—3—1967-ல் தொடங்கும் ஆண்டில் 12 பேர் பயிற்சி பெற வசதியளிக்கப்பட்டது. இப் பயிற்சி நிலேயத்தில் குறிப்பிட்ட வகுப்பினர்தான் வந்து சேரவேண்டும் என்பதில்லே. பயிற்சிபெற விருப்பம உள்ள எவரும் வந்து சேரலாம் பயிற்சிக் காலத்தில் மாதத்தி ற்கு 45 ரூபாய் ஸ்டைபண்டாகக் கொடுக்கப்படுகிறது.

நீண்ட தூர துரித பஸ்கள்.

*92. விஞ.—திரு ந. காசிராமன் : மாண்புமிகு பொதுப் பணித் தறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—3—1967-ந் தேதியில் தமிழக அரசின் போக்குவரத்து இலாகாவில் இருந்த நீண்ட தூர பஸ்கள் (Long distance Express Buses) எத்தனே ?

(இ) 31—5—1967-ந் தேதி அன்று சர்க்கார் போக்குவரத்து இலாகாவில் இருந்த நீண்ட தூர பஸ்கள் எத்தனே ?

(உ) 1—3—1967-ந் தேதி அன்று நீண்ட தூர பஸ்களின் (Express Buses) மூலம் கிடைத்த வசூல் தொகை எவ்வளவு ?

(எ) 31—5—1967-ந் தேதி அன்று நீண்ட தூர பஸ்களின் மூலம் கிடைத்த வசூல் தொகை எவ்வளவு ?

(ஐ) 1—3—1967-ந் தேதி அன்று அமுலில் இருந்த நீண்ட தூர பஸ்களின் கட்டண விகிதம் என்ன ?

(ஒ) 31—5—1967-ந் தேதி அன்று அமுலில் இருந்த மேற்சொன்ன பஸ்களின் கட்டண விகிதம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி :

(அ) 1—3—1967-ல் தமிழக அரசின் போக்குவரத்துத் துறையில் இருந்த நீண்ட தூர விரைவு வண்டிகள்—170.

(இ) 31—5—1967-ல் தமிழக அரசின் போக்குவரத்துத் துறையில் இருந்த நீண்டதூர விரைவு வண்டிகள்—178.

(உ) 1—3—1967-ந் தேதி அன்று நீண்ட தூர விரைவு வண்டிகள் மூலம் கிடைத்த வசூல் தொகை—ரூ. 38,065,

(எ) 31—5—1967-ந் தேதி அன்று நீண்ட தூர விரைவு வண்டிகளின் மூலம் கிடைத்த வசூல் தொகை ரூ. 51,581.

(ஐ) 1—3—1967-ந் தேதி அன்று அமுலில் இருந்த நீண்டதூர விரைவு வண்டிகளின் கட்டண விகிதம் :

சமவெளியில் மைலுக்கு—6 காசு.
மலேப்பகுதியில் மைலுக்கு—12 காசு.